# ஹிந்திக் கண்டனக் கூட்டங்கள்.

## விருத்தாசலம்.

### வாலிபர் தமிழ்ச்சங்கம்.

(ஒரு நிருபர்)

விருத்தாசலம், டிச. 1.

28-11-37 மாலை இத்தமிழ் சங்க சார்பாக இவ்வூர் பணிலா மண்டி தலைவரும் கடந்தைத் தமிழ்ச்சங்க பழைய அமைச்சருமாகிய தெ. மூ. இராமசாமிப்பிள்ளை அவர்களின் தலைமையில் கூடியது.

பல இளைஞர்களும் தமிழன்பர்களும் புலவர்கள் சிலரும் ஹிந்தியை எதிர்த்துப்பேசினார்கள.

மழையால் கூட்டம் விரைவில் முடிக்க நேர்ந்தது.

முடிவில் ஹிந்தியை எதிர்த்துத் தீர்மானம் நிறைவேறியது. வாலிபர் தமிழ்ச்சங்கம் என்பதை "இளைஞர் தமிழ்க் கழகம்" எனப் பெயர் மாற்றுவதாகவும் முடிவு செய்யப் பட்டது.

---

## திட்டக்குடி.

(ஒரு நிருபர்)

திட்டக்குடி, டிச. 1.

இவ்வூரில் 28-11-37-ல் அப்பாவு முதலியார் தலைமையில் சுயமரியாதைத் தோழர்களும் தமிழன்பர்களும் கூடிய பெரிய பொதுக் கூட்டம் நடைபெற்றது.

தலைவர் முன்னுரையில் தமிழுக்கு ஹிந்தியால் வரும் தீங்கைக் குறித்தும் அது பார்ப்பன சூழ்ச்சி என்பதையும் தெளிவாக விளக்கிக் காட்டினார்.

பின் சுயமரியாதைத் தோழர்கள் பலர் ஹிந்தியைக் கண்டித்தும் ஆக்கா மந்திரிசபையின் வேறு சில அட்டூழியங்களை விளக்கியும் விரிவாகப் பேசினார்கள்.

முடிவில் ஹிந்தியைக் கண்டித்து தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

---

## பெண்ணாகடம்.

(ஒரு நிருபர்)

பெண்ணாகடம், டிச. 2.

28-11-37 ஞாயிறு மாலை 5மணிக்கு கடந்தை தமிழ்ச்சங்கச் சார்பாக "ஹிந்தி எதிர்ப்புக் கூட்டம்" நடைபெற்றது. கூட்டத்திற்கு பல காங்கிரஸ் வாதிகள் உள்பட பலரும் வந்திருந்தனர்.

தென்னாற்காடு ஜில்லா போர்டு மெம்பர் தோழர் சிதம்பரம்பிள்ளை தலைமையில் பல தமிழன்பர்கள் ஹிந்தியால் தமிழுக்கு வருங்கேடுகளைக்குறித்து ஹிந்தியை எதிர்த்துப் பேசினார்கள். ஹிந்தியைக்கண்டித்தும் தமிழ் மாகாணத்தைத் தனி மாகாணமாக்கவும் தீர்மானம் நிறைவேறியது.

---

## அன்னியூர்.

(ஒரு நிருபர்)

அன்னியூர், டிச. 1

28-11-37 தேதி மாலை 5 மணிக்கு இக்கழகத்தின் ஆதரவில் தமிழ் அன்பர்கள் கூட்டம் ஒன்று இக்கழக செயலாளர் தோழர் ச. அருணாசலம் அவர்கள் அவைத்தலைமையின் கீழ் கூடிற்று. அநேக தமிழ் வாலிபர்கள் தமிழ்மொழியின் மேன்மையைப் பற்றியும், தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு உயிரையும் தியாகம் செய்ய தயாராய் இருப்பதாகவும் வீரமாகப் பேசிய பின்னர் இக்கழக உதவிச் செயலாளர் தோழர் து. சபாபதி அவர்களால் சில தீர்மானங்கள் கொண்டு வரப்பட்டு ஏகமனதாக நிறைவேறிய பின்னர் அவைத்தலைவர் பின்னுரையில் ஹிந்திமொழியை மிக வன்மையாகக் கண்டித்துப் பேசினார்.

---